எந்த ஒரு நல்ல ஆசிரியரும் இப்படிச் சொல்லமாட்ட... May be பாடத்திட்டத்தில் இல்லாததால் அப்படிச் சொ... இருக்கலாம்.

# **பாடம் சம்மந்தமான அடிப்படை அறிவைப் பெற... எப்படி ?**

நன்கு புத்தகங்களைப் படிக்க வேண்டும், நம் (Educat... System )கல்வித் தரத்திலும் மற்றும் தேர்வு முறைகளிலும்... மாற்றங்கள் தேவை.

# **நீங்க Physical Chemistry எடுக்கிறீங்களா ?**

ஆமாம்

# **வேதியலில் மிகவும் கடினமாதாக நாங்க உணர்வது Phy... Chemistry. அதிலேயும் Group Theory மற்றும் Quantum Chemi... பற்றி நினைத்தாலே பயமா இருக்கிறது. இது எதனால் ?**

Visualisation முக்கியம்; இரண்டு Dimension சுலபமா... ஆனால் மூன்று Dimension என்பது சிறிது கடினமானது. உங்க... $C_2$, $C_4$ Symmetry என்றால் எளிதில் புரியக்கூடியவை. ஆனா... $S_3$ வரும் போது Inversion நடக்கும். நாங்க சொல்ற விஷய... அதே கோணத்தில் உள்வாங்கிக் கொண்டால் நன்கு புரியும். இ... பாடத்தைப் பொறுத்தவரை பயிற்சி என்பது மிக முக்கியம்.

[மறுபடியும் நாம் நம் சிறப்பு விருந்தினருடன் ]

# **Research Field-க்கு Theoritical Knowledge முக்கிய... Practical Knowledge முக்கியமா ?**

Theoritical Knowledge தான் முதல் Basic சரியா இருந்தா... Shine பண்ண முடியும்.

# **அடிப்படை குறைபாடு நீங்க என்ன வழி ?**

நீங்க நூலகத்தில் உள்ள புத்தகத்தை எடுத்துப் படிக்கணும்,... Searh-யை விடச் சிறந்தது இது என்றார்.

[ சிறப்பு விருந்தினருக்கு வாழ்த்துக்களும் நன்றியும்... விடைப் பெற்றேன். ]







Prakash ☎: 228232

COMPLETE PERSONALITY
FOR A COMPLETE MAN

**mathi's**

MENSWEAR

C, Narayana Pillai Lane, (Opp. Hotel Dayalan)
Mayiladuthurai - 609 001.

**ராஜ் ஸ்டுடியோஸ்**

*16, ராஜ் பில்டிங் மாடியில், பட்டமங்கலத் தெரு,*
***மயிலாடுதுறை - 609 001.***
☎ : 225585



**அதிசயம், ஆச்சர்யம்**
***30 பாஸ்போர்ட் போட்டோ Rs.50 /-***
**மட்டும் குறிப்பிட்ட நாள் மட்டும்**

**RAAJ STUDIOS**
MAYILADUTHURAI

ஒரு நிமிடத்தில் பாஸ்போர்ட் போட்டோ கிடைக்கும்

LASER XEROX
50 Paise

LASER PRINT
Rs.2/- Only
(above 5 copies)

# MUTHU XEROX

Opp. Panchayat Union Office, Cutchery Salai,
M.A.Rajack Tower, Mayiladuthurai.



- XEROX
- LASER PRINTING
- COLOUR PRINTING
- SCANNING BINDING
- LAMINATION
- CD-WRITING



R.S.கிருஷ்ண &கோ
விலாசம்
கவனித்து வாங்கவும்
போலிகளை
வாங்கி ஏமாறாதீர்கள்

R.S.கிருஷ்ண &கோ
தென்னமரக்குடி எண்ணை
என்று கேட்டு வாங்குங்கள்
☎: 222144 , Cell : 98424 - 222944





# வேலை தேடும் பட்டதாரி



உருவான எண்ணங்களும்
உருண்டோடின...
அந்தச் சில நாட்களில்
உள்ளத்தின் முயற்சிகளும்
தடுமாறுகின்றன
வெற்றிப்பாதையை எண்ணி
இப்படி இருக்குமா ? அப்படி இருக்குமா ?
வாழ்க்கை
நாள் தோறும் கேள்விகளை எழுப்பும்.
மனது...
என்ன செய்வது
அதற்குத் தெரியாதே
நாளைய உலகம்
எப்படி யென்று...?

ம.முகேந்திரன்
இளம் வரலாறு [ இடை ]

# மழை



ஓ!
வானத்திலும் என்ன
குடும்பச் சண்டையா ?
மேகத்தந்தையும்,
மின்னல் தாயும்
மோதிக் கொள்வதைப் பார்த்து
மழை என்னும் குழந்தை
கண்ணீர் வடிக்கின்றதே !

எம்.நளினி
முது கணினி [இடை ]

# இளன் ஆசி வாசி..



ஆசிரியர் குழு

ஆசி வீட்டை விட்டு லேட்டாக கிளம்பிய வாசியிடம் ஏன் இவ்வளவு நேரம் கழித்து வர என்றுக் கேட்டாள் வாசியின் அம்மா அதற்கு வாசி ஆசி காலேஜ்க்கு வரலம்மா அதான் போய்ப் பார்த்து வரேன் என்றான் . என்னடா ஆச்சி, அவனுக்கு என்று கேட்ட வாசியின் அம்மா. ஒன்னும் இல்லமா நல்லாதான் இருக்கா இன்னைக்கு மேட்ச் நடந்ததுல அதான் வரலையாம் என்றான் வா சரி சரி வா சாப்பிடலாம் என்று சொல்லிக் கொண்டே சென்ற வாசியின் அம்மா. சாப்பிட்டு முடிந்தப் பின்அம்மா இன்னைக்கு வ காலேஜிக்கு வர்லையா நிறைய எழுதனும் அவன் கிட்ட நோட்டை கொடுத்துட்டு வர்ரேன் என்று சொல்லி விட்டு சைக்கிளை எடுத்தான். ஆசியின் வீட்டில் மீண்டும் நுழைந்த ஏன்டா போன உடனே வந்துட்ட, அம்மா ஏதாவது சத் போட்டாங்களா ? என்றான் ஆசி அதலாம் ஒன்னும் இல்லை என்ற வாசியை சரி சரி வா. நாம் மேட்ச் பார்ப்போம் என்றான் ஆ வாசியிடம் ஆசி இன்னைக்கு நம்ம காலேஜ்ல ஏதாவது புதுவிஷ உண்டா என்று ஆரம்பித்தான். அதற்கு வாசி உனக்கு ஒன் தெரியுமா என்றதும் வந்ததும் ஆரம்பிச்சிட்டியாடா என ஒன்னுக்கூட தெரியாதா என்றான் ஆசி. இந்த நக்கல் தா வேண்டாம்னு சொல்றேன் சொல்றத கேளுடா என்ற வாசிக் பதிலாக ஆசி சரி சரி சொல்லு என்றான், புதுசா ஒரு பில் கட்டியிருக்காங்களே என்று வாசி முடிப்பதற்குள் அது எனக்க எங்க அப்பா கட்டியது என்றான் வாசி நான் உங்க வீட் சொல்லலடா நம்ம காலேஜ்ல புதுசா கட்டடம் கட்டியிருக்காங்க அத சொன்னேன். ஏன்டா! அதற்கு என்னாச்சு! என்றான் இளன். ஆசி கம்ப்யூட்டர் டிப்பார்ட்மெண்டுக்காக பல லட்சம் செலவுப் பண் கட்டியிருக்காங்க ஆமாம் அதற்கு என்ன ? இல்லடா இப்போ நம்





கம்ப்யூட்டர் டிப்பார்ட்மெண்டில் இருந்து SWIFT என்ற புத்தகம் வெளியீட்டு விழா நடத்துனாங்க தெரியுமா? என்று வாசி சொன்னதும், இதெல்லாம் எனக்குத் தெரியவே இல்ல என்றான் ஆசி. எனக்கு என்னதான் தெரியும் காலேஜ் வந்தால் தானே தெரியறத்துக்கு என்ற வாசியிடம் நானும் ஒரு நாளைக்குப் பெரிய ஆளா வருவேன் பாரு என்றான் ஆசி. அதற்கு இளன் ஆமாம் ஆமாம் இப்பக் கூட தான் நம்ம காலேஜ்லேயே பெரிய ஆளாஇருக்க என்று அவன் உயரத்தைக் கிண்டல் செய்தான். உங்களுக்கு மட்டும் தான் எல்லாம் தெரியுமா எனக்கும் தெரியும் என்றான் ஆசி. உனக்கு என்னடா தெரியும் என்று இளனும் , வாசியும் ஆச்சரியப் படுவதுப் போல் பாவித்தார்கள் முதல்ல இரண்டுப்பேரும் வாயை மூடுங்க என்றான் ஆசி. சரி சொல்லுடா என்றனர் இருவரும். நம்ம காலேஜ்ல இருந்து ஏ.ஆர்.சி. காலேஜ்ல நடந்த இண்டர் காலேஜ் காம்படிஸன்ல கலந்துக்கிட்டு பல பரிசுகளை வாங்கிட்டு வந்துருக்காங்க, அதுமட்டுமா புதுக்கோட்டையில் நடந்த கபாடி போட்டியில் கலந்து கிட்டு வின்பண்ணியிருக்காங்க அதற்கு நம்ம காலேஜ்ல படிப்புதான் பெஸ்ட்னு நினைச்சேன், இப்படியும் இருக்காங்களா? சரி சரி வா நாம சாப்பிடலாம். எனக்கு படிக்கிற வேலை இருக்கு என்று சொன்னான் இளன். எனக்கு படிப்பு என்று சொன்னதும் தான் ஞாபகம் வருது என்றான் வாசி, என்னடா என்றான் இளன் நம்ம காலேஜ்ல புதுசா இரண்டு கோர்ஸ் கொண்டு வந்திருக்காங்க தெரியுமா ? என்றான். என்னடா அது என்றால் இளன். பயோ டெக்னாலிஜியும், விஸ்வல் கம்யூனிக்கேஷனும் தான் இது.நம்ம சுற்று வட்டாரத்திலேயே எந்த காலேஜ்லையும் இல்லையாம். அப்புறம் புதுசா ஒரு பில்டிங் கட்டிக்கிட்டு இருக்காங்களே அது எதுக்குத் தெரியுமா ? என்ற வாசிக்கு பதிலாக ஆசி ஏய் இதுக்கூட தெரியாதா அது லைப்ரரிதான என்றான். அப்படியா அப்ப காலேஜே கலக்கல் தானுசொல்லு என்றான் இளன். அதற்கு வாசி இது என்னடா கலக்கல் ?

இதோடப் பெரிய கலக்கல் ஒன்று இருக்கு என்றான். அதற்கு ஆசி என்னடா அது ? நம்ம காலேஜ்ல முதுகலை மாணவர்களிடையே, ஆங்கில அறிவை சோதிப்பதற்கான தேர்வு

வச்சிருக்காங்க. அப்புறம், பூண்டி காலேஜ்ல இருந்து, இரா
பேரு வாராங்க என்று வாசி முடிப்பதற்குள், எதுக்குடா ? என்
கேட்டான் , இளன் ! அதற்கு வாசி வேதியல் துறை மாணவர்களுக்
"Chemistry Textiles" அப்படிங்கிற தலைப்பு
கருத்துரையாற்றதான், என்றான். என்னடா புதுசு! புதுசா! சொ
என்றான் இளன். வாசி மீண்டும் தொடர்ந்தான், நம் கல்லூ
நுண்கலை மன்றத்தினர் பாரதிதாசன் பல்கலைக் கழ
கல்லூரிகளுக்கு இடையிலான போட்டியில் கலந்துக்கிட்
நாடகத்துல இரண்டாவதுப் பரிசு வாங்கிட்டு வந்து இருக்காங்
என்றான். அதுக்கு பரிசுன்னு சொன்னதும் தான் ஞாபகம் வரு
என்றான் ஆசி! என்னடா ? என்றனர் இருவரும் அதற்கு ஆசி நம்
காலேஜ்ல 'குருதிக்கொடை' ங்கிறத மையமா வச்சு, என்.எஸ்.எஸ்
சார்பாக கவிதைப் போட்டி நடத்தினாங்க தெரியுமா ? என்
முடிப்பதற்குள்.

போங்கடா எப்பபாத்தாலும் படிப்புப் பற்றிதானா என்
அலுத்துக்கொண்டான் ஆசி. அது சரி நம்ம காலேஜ்ல இருந்து கே
போய் இருக்காங்க தெரியுமா என்றான் வாசி. அதற்கு ஆசி என்ன
கேம்ப்பா! ஆமான்டா என்.எஸ்.எஸ் -ல் இருந்து 20 பே
தேர்ந்தெடுத்து பக்கத்து கிராமத்திற்கு கேம்ப் போய் இருக்காங்
பக்கத்தில் உள்ள பால்ப் பண்ணை குளம் இல்ல அந்த குளத்தைக் சு
சுத்தம் பண்ணியிருக்காங்க என்றான் வாசி. சரி! சரி! என்ற இளன்
ஆமாம் புதுசா பஸ்டாண்டு வருதுனு சொன்னாங்களே அ
என்னாச்சி என்றான். பஸ்சுக்கு ஏதுடா ஸ்டாண்டு என்று ஜோ
அடித்த ஆசி விரைவில் வரும் என்று சொல்லிக்கொள்கிறார்
என்றான். அதற்குள் உள் இருந்து பயங்கர சத்தம் கேட்டது. மூன்
பேரும் பதறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். உள்ளே போ
பார்த்தால் அட நம்ம தன்ராஜ் பிள்ளை கோப்பையுடன் டி.வி.
போஸ் கொடுப்பதைப் பார்த்து மூன்று பேரும் வாயடைத்
போனார்கள். பாரு நம்ம காலேஜ்லதா
வின்பண்ணியிருக்காங்கன்னு பார்த்தா நம்ம நாட்டு ஹாக்கி டீ
சாம்பியன் பட்டம் வாங்கியிருக்கு என்று சந்தோஷ
பட்டுக்கொண்டே சரி! சரி! நேரம் ஆகிவிட்டது நான் கிளம்புறே
என்று வாசி விடைப்பெற்றான்.





# வெற்றிப் படிகள்

தோழனே !

உன் கற்பனை சிறகுகளுக்குக்
கடிவாளமிட்டுக் காலத்தைக் கழிக்காதே
உன் சோம்பல் என்னும்
சோக கீதத்ததை வீசி எறி!
முயன்றால் முடியாதது
இல்லை !
நீ உழைத்தால்
கிடைக்காததும் இல்லை !

க.சக்திவேல்
இளம் வரலாறு ( முதல் )

# பல்



பால் சொம்புகளால்
பாலம் அமைத்து
வார்த்தைகள் என்னும்
வாகனம் விடப்பட்டது
சுங்கவரி இல்லாமல்
வெகு சுதந்திரமாக
ஆடாமல் அசங்காமலிருந்த
அந்த அற்புதப் பாலம்
பழுதடைந்து விட்டது
முதுமை பிறந்ததும்

இரா.வனிதா
இளம் இயல்பியல் ( இடை )

# புதிதல்ல...

நான் சிறு குழந்தையாக
இருந்த பொழுது
நல்வழிப் படுத்த
என் தந்தை அடித்தார்
பள்ளிப் பருவத்தில்
நன்றாக படிக்க
என் ஆசிரியர் அடித்தார்
இப்பொழுது அரசாங்கம்
என் வயிற்றில் அடிக்கிறது
வேலை இல்லை என்று...
ஒவ்வொரு பருவத்திலும் அடிபட்டதால்
எனக்கு அடி ஒன்றும் புதிதல்ல
இருப்பினும் விடாமல் அடிக்கிறது
என் குடும்ப வறுமை...

**ந.ராஜா**
இளம் பொருளாதாரம் [ இடை ]



பாட்டி : டேய் ராம் ! மணி என்ன ? பார்த்து சொல்லு !

பேரன் : எனக்கு மணி பார்க்கத் தெரியாதே பாட்டி

பாட்டி : சரி! சின்னமுள்ளும், பெரிய முள்ளும் எதிலே இருக்குதுன்னு பார்த்துச் சொல்லு


பேரன் : கடிகாரத்துக்குள்ளதான் இருக்கு பாட்டி.

**ஆர்.துர்காதேவி**
இளம் வேதியல் [ இடை ]





With Best Compliments



Sunny

--- MEN CLUB ---

**TAILORS**

138/C, Mahadhana Street,
Mayiladuthurai -1

# முரண்பாடு

எ
வி
சி



குடிக்குடியை கெடுக்கும்
குடித்துக் கொண்டே படித்தான்
குடிகாரன்...
குழந்தைகள் நாட்டின்
செல்வம்
குப்பைத் தொட்டியில்...
மொழிவாரி மாநிலம்
போராட்டம் வென்றது
தோல்வியுற்றது மொழி...

சி.பா.ராஜா
முது கணிதம் [முதல்]

## ஏன் ?



முயற்சியின் முடிவில் உழைப்பு
முன்னேற்றத்தின் முடிவில் வெற்றி
ஆற்றலின் முடிவில் சக்தி
மரணத்தின் முடிவில் முக்தி - ஆனால்
காதலின் முடிவில் மட்டும் ஏன் கண்ணீர்...

இரா.இராஜ்குமார்
இளம் வேதியல் [நிறை]


**துணுக்குகள் தொகுப்பு**

க.சக்திவேல் இளம் வரலாறு (முதல்)
எம்.வடிவேலு இளம் பொருளாதாரம் (இடை)
கே.பரிமளா இளம் வணிகம் (நிறை)





# முகவரி



ஆசிரியர் குழு

இ
த
ழ்

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்காத மனிதச் சமுதாயம் எதுவும் ன்னேறவும், மேம்படவும் வாய்ப்பே இல்லை. கல்வி என்பது மக்கள் மை சமுதாயத்தில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு ஒரு கருவியாகப் ன்படுகிறது.

புத்தகத்தைப் படித்து அதனால் ஏற்படுத்திக் கொள்ளும் றிவினை விட அனுபவமாக, செயல்முறையில் செய்து பார்த்ததால் படும் எந்த ஒரு செய்தியும் நம் மனத்தில் பதிந்து விடும். ல்லூரியில் பயிலும் மாணவர்கள், கல்லூரி இறுதியாண்டில் பல ய்வுகளை மேற்கொள்வார்கள். அதைத்தான் ஆங்கிலத்தில் oject என்று சொல்வார்கள். சில துறையில் (field-ல்) எந்த ஒரு oject-ஐ மேற்கொள்ளலாம் என்று சில Tips-கள், இதோ ங்களுக்காக. எந்த எந்த Project எங்கே [செய்யலாம்] ற்கொள்ளலாம் என்ற ஒரு சிறு துப்புகள், துடுப்புகள்.

வேதியல் பிரிவு :-

(i) சர்க்கரை பற்றிய ஆய்வினை மேற்கொள்ளலாம் [Sugar Test ]
- N.P.K.R.R. தலைஞாயிறு - Co-operative Sugar Mill
- M.R.K. சேத்தியாதோப்பு

(ii) மண் பற்றிய ஆய்வு [Soil Test ] [ மண் அரிப்பினைத் தடுத்தல் போன்ற குறிப்பிட்ட தலைப்புகளையும் எடுத்துக் கொள்ளலாம் ]. - ஆடுதுறை.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளும் ஆய்வு
- J.K. Pharma Shipcut - கடலூர்.

(i) தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீரைச் சுத்திகரித்தல் - Waste Water Treatment

(ii) எரிவாய்வு பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம்

[Petroleum Researches ] தமிழ்நாடு எரிசக்தி வளர்
- நிறுவனம் - நுங்கம்பாக்கம்.

(iii) நிலக்கரி பற்றிய ஆய்வு [Lignite Researches]

மேலே உள்ள 2,3 Project-களை [Neyveli Lignite and Powe Station ]-இல் மேற்கொள்ளலாம்.

(iv) சாயங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.
[Research in Dies ] - Vanavil dies - கடலூர்.

(v) வைட்டமின்கள் , புரதம், கொழுப்பு, மாவு போன் சத்துக்களைக் குறிப்பாக எடுத்துக் கொண்டு ஆய் மேற்கொள்ளலாம்.

[Protein Test, Cholestral Test, Carbohydrade Test, Vitamins Test ]
-All India Institute for Chemical Labouratories - சென்னை

(vi) போதைப்பொருள், பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல
[Drys Researches ] - Any Hospitals.

3. நுண்ணுயிரியல் : ( Micro-Biology )

இந்தத் துறை தற்போது முன்னிலை வகிக்கிறது. இத மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளைக் கீழே காண்போம்.

(i) UTI - Urinary Tract Infection [சிறுநீரகக் குழாயில் கோளாறு

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து Uri Sample -ஐ Collect பண்ணி அது எந்த நுண்ணியிரிய ஏற்படுகிறது என்று ஆய்வு செய்யலாம் [Any Hospitals ]

(ii) Quality of Milk [ பாலின் தரம் அறிதல் ]

பாலில் உள்ள நன்மை தரும் / தீமை த நுண்ணுயிரிகளைக் கண்டறிதல். [ Diary Farm in Karaikal

(iii) Bheer Production Using decomposed Fru
[ அழுகிய பழங்களில் இருந்து பீர் தயாரித்தல் - Any Industri

(iv) Analysis fo Drinking Water [குடிநீர் ஆய்வு ]

தண்ணீரில் உள்ள நுண்ணியிரியால் ஏற்படும் நோய் பற்றிய ஆய்வு [Annamalai University - Chidambara






# லியோ டிஜிட்டல் ஸ்டுடியோ

## லியோ டிஜிட்டல் வீடியோஸ்

## லியோ போட்டோ லேமினேஷன்

- ★ Rented Cameras
- ★ Albums,
- ★ Cassetes
- ★ Rolls
- ★ Cell and
- ★ All Photo Goods Available here.

**அனைவரையும் அன்புடன் வரவேற்கிறது**







Jc.எஸ்.மோகன்தாஸ்
லியோ டிஜிட்டல் ஸ்டுடியோ,
No.1, எ.ஆர்.நஜீம் காம்ப்ளக்ஸ்,
டவுன் எக்ஸ்டன்சன்,
மயிலாடுதுறை - 1.
☎: 227007

*எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
இந்தப் புத்தகத்தை எடுத்து வருபவர்களுக்கு 10% தள்ளுபடி வழங்கப்படும்.*

(v) பொடுகு பற்றிய ஆய்வு [Research in Dantaruff]
( Apollo Hospital - Chennai )

(vi) தோல் வியாதிகள் பற்றிய ஆய்வு [Research in Dermatid
[Institute for Dermatology - Saidapet ]

(vii) மண்வளம் காக்கும் மண்உயிரிகள்
[Beneficial Microorganisms in Soil ]

Government Arts and Science College - Tharamani - Chenn
(Specialised College for Microbiology Studies )

4. உயிரி – வேதியல் [ Bio-Chemistry ]

[மருத்துவத்துறையோடு ஒப்பிடும் அளவிற்கு உள்ள துறை ]
( Institute for Bio-Technology Studies – கோவை.]

(i) உரம் தயாரித்தல் [Fertilizers - Preparation ]

(ii) பூச்சிக்கொல்லிகள் தயாரித்தல் ( Bio-Pesticides - preparat
)

(iii) மண்புழு வளர்த்தல் [Vermiculture ] Tagore Industry
Kovilvenni – மன்னார்குடி.

மண்புழு மனிதனுக்கும் விவசாயத்திற்கும் மிகவும் உதவுகிற
இந்த மண்புழுவினைச் செயற்கை முறையில் வளர்க்கல

(iv) ( Enzyme Production Test ) என்சைம்கள் தயாரித்த

(iv) சுரபிகள் [ Harmones ]

எந்தச் சுரபிகள் எந்தெந்த வினைகளுக்குக் காரண
இருக்கின்றன என்று ஆய்வு மேற்கொள்ளலாம்.

(vi) இரத்தங்கள் பற்றிய ஆய்வு [Blood Test ] Any labouratory

5. புவியியல் [ Geography ]

(i) சந்திரமண்டலம், கோள்கள் பற்றிய ஆய்வுக
மேற்கொள்ளலாம்.

(ii) பசுமைப்புரட்சி, பற்றிய விழிப்புணர்வையே ஓர் ஆய்
மேற்கொள்ளலாம் [Greening the Earth/Green Revolution





P.MANOHARAN & BROS
Proprietor

Contact
☎: 223232

NEW PHOTO DIGITAL STUDIO

WE CHANGE LIVES

143. No.2 Road, Mayiladuthurai.

SHOOT YOUR SNAPS @ MODEST PRICES

YOU WILL NEVER NEED A MIRROR



புதுமனை புகுவிழா, திருமணம் மற்றும் எல்லா சுப காரியங்களுக்கும் பித்தளை எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள், பிரஸ்டீஜ், பட்டர்பிளை பிரிமியர் மில்டன் ஆகிய கம்பெனிப் பொருட்களை நியாயமான விலையில் தரமான நிலையில் பேரமில்லாத விலையில் வாங்க சிறந்த ஸ்தாபனம்.

KVS PATHRAKADAI

159/110 PATTAMANGALA STREET,
MAYILADUTHURAI - 609 001.
☎: 223002, 225346



# மயூரி

## பெண்கள் ஆடையகம்

152, மகாதானத் தெரு,
ICICI Bank எதிரில்,
மயிலாடுதுறை.



சுடிதார், பிளவுஸ் சிறந்த முறையில்
தைத்துக் கொடுக்கப்படும்.

புதுரக சுடிதார் மெட்டீரியல் கிடைக்கும்.

திருமணத்திற்கு நகைசெட் மற்றும்
பரதநாட்டிய டிரஸ் வாடகைக்கு
கிடைக்கும்.

TEXMO

'டெக்ஸ்மோ' போர்வெல் சப்மெர்சிபிள்
சிங்கிள் பேஸ் டொமஸ்டிக் பம்பல்
சிங்கிள் பேஸ் ஜெட்பம்ப்ஸ்.

AN ISO 9001 CO

AQUATEX

'அக்வாடெக்ஸ்' விவசாய மோனோ...
ஓப்பன் வெல் சப்மெர்சிபிள்ஸ்
எலக்ட்ரிக் மோட்டார்ஸ்



சிறந்த முறையில் வீடு மற்றும் விவசாய உபயோகத்திற்கான ஆழ்குழாய் கிணறு அமைத்து நீர்மூழ்கி மோட்டார் போட்டுக் கொடுக்கப்படும்.

Authorised Dealers

**BABY TRADERS**
117, Pattamanagala Street,
MAYILADUTHURAI - 609 001
☎: 222323






Institute for Geographical Studies Kew - Kolkatta.

**விலங்கியல்** [ Zoology ]

(i) பறவைகள் பற்றிய ஆய்வு ( Research about Birds )
[தேனீ வனம் ] - தேனீ மாவட்டம் [ காடு ]- வேடந்தாங்கல்

(ii) தேனீக்கள் வளர்ப்பு [Honey bee Project )- பொள்ளாச்சி வனம்

(iii) கொசு பற்றிய ஆய்வு [ Mosquito Research ]

(iv) குறிப்பிட்ட ஒரு விலங்கினை எடுத்து ஆய்வு செய்யலாம்.
- (Any Animals) Vandalur Zoo - Vandalur - Chennai.

**தாவரவியல்** [ Botany ]

(i) காளான் தயாரித்து உணவாகப் பயன்படுத்தலாம் [Mushroom Cultivation ]ஈரப்பதமுள்ள எந்த ஒரு நிலப்பரப்பிலும் Project செய்யலாம்.

(ii) அசோல்லா - [Azolla]

இது கோழி, ஆடு போன்ற உயிரினங்களுக்கு உணவாகப் பயன்படுகிறது. நெற்பயிர் உள்ள இடத்தில் இதனைத் தூவினால் பயிர் நல்ல மகசூலைக் கொடுக்கும்.

அசோல்லாவைத் - தண்ணீர் தொட்டிகளில் வளர்க்கலாம்.
- [Any Place near Water Tanks ]

(iii) திசு வளர்ப்பு [ Tissue Culture ]

[ஒரு சோதனைக் குழாயில், ஏதோ ஒரு விதையினைப் போட்டு அதற்கு தக்க உணவூட்டம் அளித்து அதனை ஒரு மரமாகச் சோதனைக் குழாயிலேயே வளர்த்தல் ]

- பூண்டி - புட்பம் கல்லூரி

- மயிலாடுதுறை, மன்னம்பந்தல் - அ.வ.அ.கல்லூரி

(iv) கிராம்பு விளைவித்தல் போன்ற ஆய்வினை மேற்கொள்ளலாம். கிராம்பு பெரும்பாலும் சில மண்ணில் மட்டுமே வளரும்.

முகவரி தொடரும்...

## ஈரம் இல்லை

காலத்துளிகள் காய்ந்து போக
உதிர்ந்தது மானிடம்,
எதிர்கால வாழ்க்கையின் ஏக்கங்கள்!!

மண்ணின் மைந்தர்கள் நாங்கள் - மரங்கள்,
சாலையோரம் நிற்பதற்குக் கூட
அரு கதை இல்லையாம்
அவனின்றி நாங்கள் இல்லை.
மேகங்கள் அழுகிறது !

கருமேகம் அவன் மறைந்து நின்று
எப்பொழுதாவது தலை துவட்டுகிறான்
துளிகள் எங்களைத் தொடுவதற்குள்
மாயமாகிறது,
நதிகள் அழுகிறது!

என்னை மூடி பசுமை காப்பாள்
என் மானம் காத்த ஆடை அவள்
அவளும் வந்து நாளாயிற்று
கதிரவன் பார்வையில் ஏளனம்,
பூமி அழுகிறது !

ஆழம் பார்த்த மனிதனிடம்
எத்தனை நாள் சகித்திருப்பாள்
பூகம்பமாய் எழுந்திடுவாள்.
மனிதன் அழுகிறான் !

யாருக்கு ஆறுதல் சொல்ல
இவர்கள் அழுகையில் கூட ஈரம் இல்லை !

ஏ.சமாலியேல்
இளம் ஆங்கிலம் [ நிறை ]







## வாசகர்தூது

இளந்தூது
இரகசியமின்றி
இன்னது இனியது என - இளையோர்க்குப்
பகுத்துக் கொடுக்கும்
தாய்மையான வழிகாட்டி

- இரா.நளினி
இளம் நுண்ணுயிரியல் [ நிறை ]

இனிய இளந்தூதிற்கு

மாணவச் செல்வங்களுக்கு நல்ல ஒரு நண்பனாக இருக்கும் ஆசிரியர் குழுவுக்கு வணக்கம். இளந்தூதில் வரும் அனைத்தும் நன்றாகவே உள்ளன. குறிப்பாகத் திறவுகோல் என்னும் பகுதி மிகவும் அருமையாக உள்ளது. மாணவச் செல்வங்களின் திறமைகளை வெளிக் கொணரச் செய்ய இளந்தூது ஏதுவாக உள்ளது.

க.பரிமளா
இளம் வணிகம் [ நிறை ]

மாணவர்களின் திறமைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி -
இளந்தூது

-அனிதா
இளம் நுண்ணுயிரியல் [ இடை ]

பாத்திரக் கடை

S.N.குருமூர்த்தி சன்

பித்தளை & எவர்சில்வர்



பெரியக்கடைத் தெரு,
மயிலாடுதுறை – 1.
☎: 222816





# மனற்கேணி




இன்று...
நேற்று...
நாளை...
– சொல்பவன் இவன்
ஜோசியன் அல்லன்
இவனிடம் சென்றால் நம் அறியாமையைப்
போக்குவான்
சூரியன் அல்லன் இவன்
ஆக மொத்தத்தில்
எல்லாருக்குமே
வாழ்க்கைப் பாதைக்கு
வெளிச்சத்தைக் கொடுக்கக் கூடியவன்
இவன் வேறு யாரும் அல்லன்
நூலகம் தான்.

நம் மயிலையில் உள்ள நூலகங்களைப் பற்றி உங்களுக்காக ந சிறு கண்ணோட்டம்.

✍ **முதலில் கூறைநாடு கிளை நூலகத்தைப் பற்றிப் ர்ப்போம்.**

1-6-1956 ஆம் ஆண்டு மயிலாடுதுறை கிளை நூலகம் ாடங்கப் பட்டுத் தற்சமயம் காந்திஜி ரோடு கூறைநாடு பகுதியில் டகைக் கட்டத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் முற்கால ல்கள் முதல் கணிப்பொறி நூல்கள் வரை உள்ளன.

காலை 8-00 மணி முதல் 11-30 மணி வரையிலும் யங்குகிறது. இந்நூலகத்தில் ஒரு நூலகர் மற்றும ஓர் உதவியாளர் ள்ளனர். இந்நூலகத்தில் சுமார் 30,081 நூல்கள் உள்ளன. இதில் றுப்பினர் ஆவதற்கு ரூபாய் 20 வைப்புத்தொகையும் 10 ரூபாய் தாவும் செலுத்தினால் போதும் . இந்நூலகத்தில் ரூ 1000 ்கொடையும் செலுத்திப் புரவலராகச் சேரக் ட்டுக்கொள்வதுடன் இத்தொகை வங்கியில் நிரந்தரமாக வக்கப்பட்டு அதிலிருந்து பெறப்படும் வட்டி மட்டும் நூலக ர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு சேர்ந்தால் கல்வி அமைச்சர் மூலம் பட்டயம் வழங்கி ளரவிக்கப் படுவார்கள் இந்நூலகத்தில் அனைத்து நாளிதழ்களும் வஇதழ்களும் கிடைக்கின்றன. இந்நூலகம் தூய அந்தோனியார் ளியைத் தத்தெடுத்து வளர்த்து வருகிறது. இதன் நோக்கம் ணவர்களுக்கிடையே படிக்கும் ஆர்வத்தைத் துண்டுதல் ஆகும்.

எ வி சி

இந்நூலகத்தில் பணியாற்றும் நூலகர் திரு.முருகையன் அவர்கள் நாகை மாவட்டத்திலேயே சிறந்த நூலகர் என்ற பட்டம் பெற்றவர்.

✍ அடுத்தப்படியாக திருவள்ளுவர் படிப்பகத்தைப் பற்றி காண்போம்.

1935ஆம் ஆண்டு மயிலாடுதுறை திருவாரூர் சாலை கேணிக்கரையில் சாக்கடையாகக் கிடந்த இடத்தில் தொடங்கப்பட்ட இப்படிப்பகம் பல இளைஞர்கள் மற்றும் அனைத்துக் கட்சியினர் உதவியுடன் 1953 ஆம் ஆண்டு ஒரு கொட்டகைக்கு மாற்றப்பட்டது.

இந்நூலகம் தொடங்கப்பட்ட காலத்தில நம் மயிலையில் கிளை நூலகம் இல்லை. இதற்குப் பல பெயர்கள் மாற்றப்பட்டு இறுதியில் திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் பெயரைச் சூட்டினார்கள் இந்நூலகத்தில் அனைத்துப் பருவ இதழ்களும் நாளிதழ்களும் கிடைக்கும். இதில் உறுப்பினர் ஆவதற்கு ஆயுள் சந்தா கொடுத்து சேரலாம். தினமும் காலை 7 மணிக்குத் திருக்குறள் அறிவுரை நடைபெறுவதோடு புதன் கிழமை தோறும் திருக்குறள் பற்றி ஆய்வும் நடத்தப்படுகிறது. இந்நூலகத்தைத் திறம்பட நடத்தி வருபவர் திரு.நாக.இரகுபதி ஆவார். இந்நூலகத்தில் மொட்டும் மலரும் என்னும் பள்ளியை நிறுவித் தமிழ்மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

நாகை மாவட்டத் திலேயே முதலில் தோன்றிய தமிழ்வழிக் கல்வி மையம் இதுவே ஆகும்.

✍ தன்னார்வ பயிலும் வட்டத்தைப் பற்றிக் காண்போம்

20-02-2001 அன்று பியர்லஸ் திரையரங்கம் எதிரில் சென்டரல் லயன்ஸ் சங்கமும் நாகை மாவட்ட வேலை வாய்ப்பு மையமும் இணைந்து தன்னார்வ பயிலும் வட்டத்தைத் தொடங்கியது. இது மாலை 4-30 மணி முதல் இரவு 7-30 மணி வரை இயங்கும் . இப்பயிலகத்தில் வேலைவாய்ப்புச் செய்திகளைப் பற்றிய அனைத்துச் செய்தித் தாள்களும் கிடைக்கின்றன. வங்கித் தேர்வுகள் மத்திய மாநில தேர்வுகள் குறிப்பாக TNPSC, UPSC, Railway, Defence Services, Staff Selection Commission, M.C.A., M.B.A., போன்ற போட்டித் தொடர்பான ரூ 35,000 மதிப்புள்ள புத்தகங்களும் மேடைப் பேச்சு தலைமை பண்பு நேர்முகத்தேர்வு போன்றவற்றிற்கான நூல்களும் உள்ளன. போட்டித் தேர்வுக்குத் தேவை யெனில் இலவசப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

இவற்றைப் பயன் படுத்துங்கள் இவை உங்கள் வாழ்க்கைப் பாதைக்கு ஊன்றுகோலாக அமையட்டும்.





இ த ழ்

# முதல் பணி

மீண்டும் ஒருமுறை கடிதத்தைப் படித்தேன்

அன்புள்ள தனுசுக்கு,

நலம், நலமறிய ஆவல்

நாளை மாலை 4 மணிக்கு நகராட்சிப் பூங்காவில் எனக்காகக் காத்திருக்கவும் மற்றவை நேரில்

இப்படிக்கு
**விஜயலட்சுமி**

விஜயலட்சுமி இந்தப் பெயரைக் கேட்டவுடனே ஆறு ஆண்டுகளாக எனக்குள் தூங்கிய பழி வாங்கும் மிருகம் விழித்துகொண்டது.நினைவுகள் இறந்தகாலம் நோக்கி ஓடைபோட்டன. மறக்கமுடியாத அந்தக் கல்லூரி நாட்கள் பசுமைமாறாத அந்த நினைவுகள்

மெல்லத் திரும்பத்தொடங்கியது.மயிலாடுதுறையில் பிரபலமான கல்லூரி அது. தன்னுடைய கல்வி சேவையால் அது கிராமத்து மக்களை கவரணைத்துக் கொண்டிருந்தது. அங்குதான் விஜயலட்சுமியைச் சந்தித்தேன். பார்த்த உடனேயே பிராமண பெண் என்பதை புரிந்து கொண்டேன்.

முதல்நாள் வகுப்புத் தொடங்கியபோது அவள் என் வகுப்புதான் என்பது தெரியவந்தது. நாங்கள் இருவரும் தான் முதலில் வகுப்பறைக்கு வந்தோம். ஹலோ சொல்லி அறிமுகப் படலத்திற்கான சகல சம்பிரதாயங்களையும் முடித்துக் கொண்டேன்.

பிராமண வீட்டுப் பெண் என்றால் கேட்கவா வேண்டும். அப்பா ஊரினில் இருக்கும் பெரிய கோடீஸ்வரர்களுள் ஒருவர் ஒரே பெண். நல்ல சிவப்பாய் அழகாக இருந்தாள். இடை வரை நடைபுரியும் கூந்தலை இறுக்கிப் பின்னாமல் தழைய தழையப் பின்னி... ஐந்து முழம் மல்லிகையைத் தலையில் சுற்றிப்... பட்டுபாவாடைத் தாவணி உடுத்திக்... காலில் ஜல் ஜல் கொலுசு இட்டு அவள் நடந்து வரும் அழகே அழகு.

வகுப்பில் சேர்ந்த ஒரு வாரத்திற்குள்ளேயே முதலில் என்னிடம் அவள் ஒரு ஸ்வீட் பாக்சை நீட்டினாள்.

என்ன விசேசம் என்றேன்.

பர்த்டே ஒரே வார்த்தையில் முடித்து கொண்டாள். நான் தடுமாறிப் போனேன். முன்பே சொல்லியிருந்தாலும் ஏதாவது பொருள் வாங்கிப் பரிசளிக்கலாம் இப்படித் திடீரென்று சொல்லுகிறாள்.

# ஜகன்

## கிறிஸ்தவ இலக்கிய மையம்

இம்மையத்தில் வேதாகமங்கள், ஆன்மிகப் புத்தகங்கள், பிறந்த நாள், திருமண நாள், கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்து அட்டைகள், வேத வசனங்கள் அடங்கிய பலரக பல வண்ண ஸ்டிக்கர்கள், ஒலி நாடாக்கள், கணினி குறுந்தட்டுகள், 2004 ஆம் ஆண்டிற்கான வேத வசனங்கள் அடங்கிய மாதாந்திர நாள் காட்டிகள், தினசரி நாள் காட்டிகள், பண்டிகை நாள் அலங்காரப் பொருட்கள், இதரப் பரிசுப் பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

இம்மையத்திற்குத் தாங்கள் வருகை தந்து ஆதரவு அளித்துப் பயன் பெற அன்புடன் அழைக்கிறோம்.

Jagan CLC

**ஜகன்**

**கிறிஸ்தவ இலக்கிய மையம்**

சிவாஜி கணேசன் வணிக வளாகம்
முதல் தளம்,
வண்டிகாரத் தெரு,
மயிலாடுதுறை – 609 001.





☎: 221143

சுட்டெரிக்கும் வெயிலிலும்
சுகமான காலணிகள் வாங்க சிறந்த ஸ்தாபனம்

# சூப்பர் வாக்

Bata Action LIBERTY

ஸ்கூல் பேக், காலேஜ் பேக், லேடீஸ் பேன்ஸி பேக், இவை அனைத்தும் குறைந்த விலையில் உயர்ந்த தரத்தில் கிடைக்கும்.

185, பட்டமங்கலத் தெரு,
மயிலாடுதுறை.

நல்ல வேளை முதல் நாள் நான் அவளைப் பார்த்தபோதே அந்
அழகை மனத்தில் நிருத்தி என் தூரிகைக்கு வேலைக் கொடுத்
காகிதத்தில் வரைந்த அந்த ஓவியம் நோட்டில் பத்திரமாய் இருந்த
அதை எடுத்து நீட்டி மெனி மெனி ஹேப்பி ரிட்டன்ஸ் ஆப் த டே
ஏ என்றேன்.

வி தேங்ஸ் சொல்லி வாங்கிக் கொண்ட அவள் இருக்கைக்
சி சென்றுவிட்டாள்.

இப்படித் தொடங்கிய நட்பு படிபடியாக முன்னேறி தனுஷ்கோ
ஆதித்தன் என்ற எனது பெயரை டேய் தனுசு, வாடா கேன்டீ
வரைக்கும் போயிட்டு வரலாம் என்பதில் நின்றது.

நான் சாதாரன மனிதன் தானே, எப்படி எல்லாமே கட்டுபடுத்தி
பார்த்தேன் அவளுடனான நட்பு காதலாக மலர்வதைத் தடுக்க
முடியவில்லை பொறுமையாக இரண்டு ஆண்டு கடந்து மூன்றாவ
ஆண்டு ஒரு காதலர் தினத்தில் அவளைத் தனியே சந்தித்து ஒரு சிவ
ரோஜாவையும் ஒரு கடித்தையும் கொடுத்தேன்

பிரித்து பார்த்தாள், படித்தாள் வெடித்தாள்

பொறுக்கி ராஸ்கல் நீ பழகினது எல்லாம் இதுக்காகத் தானா எ
அந்தஸ்து என்ன ?

ஜாதி என்ன ? நான் வந்து உன்ன லவ்பண்ணனுமா, எனக்கா
பெரிய கோடிஸ்வரனோட பையனெல்லாம் காத்துக்கிட்டு இருக்காங்க
உன்ன என் புருஷனா நெனைக்குறதுக்கே சீ சீய்.. இனிமே எ
முகத்திலே முழிக்காதே போய்டு ப்ளீஸ் போய்டு . போய்டு.. அவ
போட்ட சத்தத்தில் கல்லூரிப் பூங்காவில் உள்ள பூக்களெல்லாம் திரு
எனைப்பார்த்து இளக்காரமாய் சிரிப்பது போல் இருந்தன.

என்ன சொல்லிவிட்டாள். பணமில்லை கீழ்ஜாதி என்
காரணத்தால் கண்டபடி பேசிவிட்டாளே விடக்கூடாது. விடமாட்டே
அவள்முன் பெரிய ஆளாக ஆகியே தீர வேண்டும். அவளை எப்படியாவ
பழி வாங்கியே தீர வேண்டும் என்ற வெறி எனக்குள் எழுந்தது.

படித்தேன் படித்தேன் வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கினே
கூடவே வேலையும் வந்தது. உழைத்தேன் சரியாக ஒரு ஆண்டில் எ
திறமையைக் கண்ட தொழிற்சாலை எனக்கு சீஃப் எஞ்சினீயர் ஆக
பதவி உயர்வு கொடுத்து உயர்த்தியது.

இதற்கு இடையில் பழி என்ற வார்த்தை கிட்டதட்ட மறந்தே
போய்விட்டது எனலாம்.

இதோ இப்போது மீண்டும் அந்தப் பழிவாங்கும் மிருகம் விழித்
கொண்டது. இந்தமுறை விட்டுவிடக் கூடாது என்று முடிவு செய்தே

மறுநாள் சரியாக நான்கு மணிக்குப் பூங்கா வாசலில் என
ரீவீலரை நிறுத்திவிட்டு காத்திருந்தேன்.





சற்றைக்கெல்லாம் தோளில் ஒரு கை விழுந்தது யாரோ
ரும்புத்துண்டை என்மேல் வீசியதுபோல் இருந்தது. கூர்ந்து
வனித்தேன். விஜி அவளேதான். அதிர்ந்துவிட்டேன் எப்படி இருந்த
ஜி நன்றாகப் பருப்புசாதம் தயிர் சாப்பிட்டுக் கொழு கொழு என்று
ருந்த விஜியா? இவள் கல்லூரிக்கே ரீவீலரில்தான் வருவாள். இ
ப்போது காரில் வருவாள் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் த
ப்போது நடந்து... அதுவும் நூல்புடவையில் கசங்கிய வெள்ளைக் ழ
கிதமாக தெரிந்தாள்.

என்ன தனுஷ் அப்படிப் பாக்குற நான் தான் விஜி என்ற வுடன்தான்
நினைவுக்கு வந்தேன்.

வா விஜி எப்படி இருக்கிற. சரிவா அந்த ரெஸ்டாரன்டுல போய்
தாவது சாப்பிட்டுக்கிட்டே பேசலாம் என்றேன்.

சூடாக ஒரு காப்பி குடித்து முடித்ததும், சொல்லு விஜி எப்படி
ருக்கு கல்யாண வாழ்க்கை? உன் ஹஸ்பெண்ட் வரலையா என்றது
ன் தாமதம் உடைந்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

என்னாச்சு விஜி...?

அப்பாவுக்குப் பிசினஸ்ல லாசாகி மனசொடஞ்சி முடிப்பதற்குள்
கேள்விப்பட்டேன் என்றேன். அவரும் அப்பாவோட கடனை
டைக்க அலைஞ்சதிலேயே அவரோட பிசினஸ் விட்டுன்டார் இப்ப
ட்டுல உள்ள எல்லாத்தையும் வித்துண்டு பிசினஸ் ஸ்டெடி
ண்ணிடலாம்னு நினைச்சார் அதுவும் போயிடுத்து இனிமே விக்கறதுக்கு
னும் இந்த தாலியும்தான் தனுஷ் மிச்சம் தாலியைத் தூக்கி காட்டினாள்
ரலில் பேசும் தொனி மாறியிருந்தது.

நான் கண்களை மூடிகொண்டேன்

ஆமா உனக்குக் கல்யாணம் ஆயிடுத்தா விஜி சட்டென்று கேட்க
ல்ல. ஏன் பண்ணிக்கல ?

இப்ப நீ என்ன செஞ்சுண்டு இருக்கே.

ஊட்டில ஒரு ஃபேக்ட்ரீல சீப் இஞ்சினீயர் வேலை புடிச்சிருந்தது
ங்கே செட்லாயிட்டேன். அப்பா அம்மாவ பார்த்துட்டுப் போலாம்னு
ந்தேன் அப்பதான் உன் லட்டர் கிடச்சது என்றேன்.

மீண்டும் விசும்பி விசும்பி அழுதாள் எல்லாரும் பாக்குறாங்க விஜி
ளீஸ் என்றேன்.

அன்னக்கே உன்னோட காதல ஏத்துகிட்டு... அவன் பழைய
ச்சைதான் ஆரம்பிக்கிறான் என்று தெரிந்ததும்.

வேண்டாம் விஜி நான் உனக்கு என்ன ஹெல்ப் பண்ணனும்.

அவர் ரொம்ப மனசொடஞ்சி போயிருக்கார் பாக்க சகிக்கல நீதான்
படியாவது...

உன் ஹஸ்பன்டை நான் பாக்கனும் காலைல வீட்டுக்கு வரேன்.

அட்ராஸ் குடு என்றேன்.

முகவரியைச் சொன்னாள் குறித்துகொண்டேன் வரேன் தனு... சென்றுவிட்டான். அன்று அந்தஸ்தையும் ஜாதியையும் சொல்லி வெறுத்தவள் இன்று அதுக்காக என் முன் வந்து நிற்கிறாள்.

மறுநாள் அலைந்து அவள் வீட்டைக் கண்டுபிடித்தபோது பசிப்ப... போல் இருந்தது. வீடே மயான அமைதியில் இருந்தது. மெதுவாக படியேறி மின் விசையை அழுத்தினேன் அந்த நிசப்தத்தை அ... கலைத்தது அவள் தான் வந்து கதவைத் திறந்தாள்.

நேற்றுப் பார்த்த அந்த சோகமான முகத்தில் இன்று கொஞ்ச... நம்பிக்கை தெரிந்தது. வாதனுஷ் உள்ளே வா என்றாள் ஒரு பிளாஸ்டி... நாற்காலியை எடுத்துப் போட்டாள். உள்ளே சென்றாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு இளைஞன் உள்ளிருந்... வெளிபட்டான். அவன் முகத்தில் முட்புதற்களை வளர்த்து சோக... துணியைக் காய போட்டிருந்தான். வாங்க என்றான். விஜி உங்களை... பத்தி நிறைய சொல்லியிருக்கா என்றான். என்ன சொல்லியிருப்பா... இவன் தான் என்ன காதலிச்ச பைத்தியகாரன் என்றா நல்ல வேலையி... இருக்கிறான் உதவி செய்வான் என்றா? என்று காப்பி கொடுத்தா... மறுத்துவிட்டு வெளியே வந்தேன் அவளும் வந்தாள்.

என்ன படிச்சிருக்கார்

ப்ளஸ் டூ தான் கூடவே ஸ்டெனோ முடிச்சிருக்கார்

வேல வாங்கிக் கொடுத்தா செய்வாரா

ம்ம்ம்

எனது செல்லை எடுத்தேன் மேல் அதிகாரியிடம் நல்... செல்வாக்கு இருந்ததால் தொடர்பு கொண்டு பேசினேன் உடனே... சம்மதம் கிடைத்தது என்னுடைய விசிடிங் காட்டை எடுத்து... கொடுத்தேன்.

அவர இந்த அட்ரஸ்ல என்ன வந்து பார்க்க சொல்... கிளம்பிவிட்டேன். அவள் மறுபடியும் கண்டிப்பா வேல கிடைச்சுரு... என்றாள் நிச்சயமா என்று திரும்பிப் பார்த்தேன்.

அவள் முகத்தில் நம்பிக்கை ரேகைகள் படர்ந்தன என் மனத்தி... அவளைப் பழிவாங்கி விட்ட திருப்தி...


**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்...**

குறள் படித்தது நினைவுக்கு வந்தது.

அ.வினோத் ரா...
இளம் ஆங்கிலம் [ முத...







# தீவிர ( மான ) வாதம்

நீ புறப்படும் போதே
கலவரம் தான்...
நீ போகும் போது
துப்பாக்கிச் சூடு...
நீ போன வீதியெங்கும்
சோடா பாட்டில்கள்...
கடவுள் என்னும் பெயராலே - இங்குத்
தீவிரம் நடக்கிறது - இதனால்
இறந்தவர் பலர் - நடுரோட்டில் இதற்காகவே
இறக்கி வைக்கப்பட்டவன் நீ!...

ப.பாபு
இளம் வரலாறு [ நிறை ]

# துக்கம்

இன்று அவனுக்கு நல்லவன்
பட்டம் !
ஊரெல்லாம் அவன் புகழ் !
பூக்கள் அவனைச் சரண்அடைந்தன !
அவனை தோள்மேல் தூக்கி வைத்துக் கொண்டு !
தெருவெல்லாம் ஆட்டம், பாட்டம் ;
ஆனால், அவன் பேரைத்தான்
பிடுங்கிவிட்டு,
பிணம் என்று மாற்றிவிட்டார்கள்!

பா.பிரகாஷ்
இளம் ஆங்கிலம் [ முதல் ]

☎ Off : 242665
Resi : 251012

# மேஸ்ட்ரோ

## டிஜிட்டல் வீடியோஸ் - போட்டோஸ்



எல்லா விதமான டிஜிட்டல் வீடியோ போட்டோ மற்றும் வீடியோ கேசட்டுகளை வி.சி.டி. ஆக மாற்றித் தருகிறோம்.

S.S.R. காம்ப்ளக்ஸ், கிட்டப்பா அங்காடி எதிரில்,
நெ.2, ரோடு, மயிலாடுதுறை.

## விவேகானந்தா

**பேப்பர் ஸ்டேசனரி மார்ட்**

116, நெ.2 ரோடு, மயிலாடுதுறை.
☎ : 226593



- Students Note Books & Government Text Books.
- Account Books & Office Envelope covers
- Decoration flowers, all Matellie items - Welcome Happy New Year & Birthday, X-Mas etc.,
- Paper plates, Seasons greeting.
- PVC pouches & folders
- Quality Office Files, Lever, Timex, Box, Laminated & College Files, etc.,
- All Office Stationery, Pen & Ball Pen items A to Z.





# எட்டாக் கனி

க.ஜெயஸ்ரீ
இளம் நுண்ணுயிரியல் [ இடை ]

ஒருமுறை டைட்டானிக் போன்ற ஆடம்பர சொகுசு கப்பல் ...ன்று இங்கிலாந்தின் இலண்டன் துறைமுகத்தில் இருந்து ...மெரிக்காவுக்குப் புறப்பட்டது. அந்தப் பணக்கார உல்லாசப் ...யணிகளின் நடுவில் பாவம் ஒரு ஏழை வாலிபரும் இருந்தார். ...மெரிக்காவுக்குப் போனால் பிழைப்பு தேடிக்கொள்ளலாம் என்ற ...ைனப்பில் கையில் இருந்த காசையெல்லாம் கொட்டிக் கப்பல் ...க்கெட் வாங்கியிருந்தார். மனைவி கட்டிக் கொடுத்த உணவுப் ...பாட்டலம் கைவசம் இருந்தது. அதைத் தவிர ஒரு தம்பிடி கூட ...ல்லை.

கப்பல் அட்லாண்டிக் கடலில் பயணித்துக் கொண்டிருந்தது. ...ண்டநாள் பயணம் என்பதால் இளைஞர் கொண்டு வந்த ரொட்டிகள் ...னைத்தும் ஒருசில நாட்களில் தீர்ந்து விட்டன. பாவம் கப்பல் மேல் ...த்தில் பயணிகள் ஆடம்பரமாக விருந்து உண்பதை ஒரு ஜன்னல் ...ழியாகப் பார்த்துப் பசியைச் சமாளித்தார் அவர் 4 நாட்கள் ...லைப்பட்டினியாகத் தவித்தார். அதன் பிறகு தாக்குப் பிடிக்க ...டியவில்லை. அப்படியே கப்பல் காப்டனின் காலில் போய் ...ழுந்தார். அய்யா, எனக்கு உணவு கொடுங்கள். பசி உயிர் ...பாகிறது. அதற்குப் பதிலாக நீங்கள் சொல்லும் எந்த ...வலையையும் நான் செய்கிறேன். நான் உயிரோடு இருந்தால்தான் ...ன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என் று கெஞ்சினான்.

கப்பல் காப்டன் அந்த இளைஞனை அதிர்ச்சியுடன் பார்த்து ...ரப்பா நீ? என்றார் நானும் கப்பல் பயணிதான் என்றான் ...ளைஞன். எங்கே டிக்கெட்டைக் காட்டு என்றார் காப்டன் ...ளைஞன் டிக்கெட்டைக் காட்டியதும் காப்டன் சொன்னார். அட ...டி முட்டாளே. இந்த டிக்கெட் கப்பலில் தரும் உணவுக்கும் சேர்த்து ...த்த டிக்கெட். இங்கே நடந்த அனைத்து விருந்துகளிலும் நீ ...ராளமாகக் கலந்து கொண்டு வயிறுமுட்டச் சாப்பிட்டு ...ருக்கலாம். அதற்கும் சேர்த்துதான் நீ பணம் ...லுத்தியிருக்கிறாய். 4 நாட்கள் தேவையில்லாமல் பட்டினி ...ந்திருக்கிறாய் என்றார் நெகிழ்ச்சியுடன்

உணர்வுகளை உலுக்கக் கூடிய ஓர் உண்மைச் சம்பவம் இது. இந்த இளைஞனின் கதை நமக்கும் பொருந்தும். ஆம் கண்

எதிரே இருக்கும் வாய்ப்பினை அறிந்துகொள்ளாமல் எட்டாத ஒன்றை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? இறந்தகாலம் என்பது இறந்த காலம் தான். அது இனிமேல் வராது. எதிர்காலம் என்பது இனிமேல்தான் வருவது. அது வரலாம் வராமலும் இருக்கலாம். நம்ப முடியாது. இப்போது இருப்பது நிகழ்காலம் தான். இதுதான் நிஜம் இது ஓசோவின் தத்துவங்களுள் ஒன்று இதைப் புரிந்து கொண்டால் இந்த உலக வாழ்க்கை இனிமையாகும்.

க.ஜெயஸ்ரீ
இளம் நுண்ணுயிரியல் [ இடை ]

## வாழ்க்கை



தொந்தரவு என்னும் பிடியில்
தொலைந்தேன்
வாழ்வேன் என்னும் முயற்சியில்
வாழ்ந்தேன்
முயல்வேன் என்னும் நம்பிக்கையில்
முயன்றேன்
உயர்வேன் என்னும் உழைப்பில்
உயர்ந்தேன்

பிரியா
இளம் மின்னணுவியல் [ முதல் ]

**துணுக்குகள்**

சர்வதேச எழுத்தறிவு தினம் செப்டம்பர் 8 ஆம் நாள் கொண்டாட படுகிறது.

நவீன பத்திரிகையின் தந்தை என்று போற்றப்படுபவர் டேனியல் டெபோ ஆவார்.

நமது நாட்டில் முதன் முதலாக ரேஷன் முறையைப் புகுத்தியவர்கள் பிரெஞ்சுக்காரர்கள்.







# NETWAY

Internet Center

40 / 59, Big Bazzar Street,
Mayiladuthurai - 1
☎ : 240 436



- Browsing
- CD - Writing
- Laser Printing
- Job Typing
- Computer Service
- STD / PCO
- Scanning

# என்னைப் போல



உடல் பூராவும் குறுக்குக்
கோடுடன்
நீண்ட கோடாய் நெளிந்து
போகும்
அசையாத அட்டைப் பூச்சியே
நீ மலைபூராவும் ஏறி இறங்கி
எதையோ தேடுகிறாய்
என்னைப் போல...
அது இல்லையானால்
நெட்டி முறித்த படியே
தூங்கிக் கிடக்கிறாய்
நெடுங்காலமாய்ப்
பனியிலே நனைகிறாய்
வெயிலிலே நெளிகிறாய்
நீ எங்கே ஓடினாலும்
உனது இருப்பு என்னவோ
கிடப்பிலேதான்
என்னைப் போல...

கே.வாசுகி
முது தாவரவியல் ( முதல் )

**துணுக்குகள்**

இந்தியாவில் முதலில் வெளியான பத்திரிகை
- பெங்கால் கெசட்

தமிழ்நாட்டில் முதலில் வெளியான பத்திரிகை
- மெட்ராஸ் கெசட்

தமிழ் சுருக்கெழுத்தை உருவாக்கியவர்
- சீனிவாச ராவ்





# நிலாப் பெண்



காலண்டரில்
மாதம் ஓர் அமாவாசை
எனக்கு
வாரம் ஓர் அமாவாசை
அது - ஞாயிற்றுக்கிழமை
ஆம்!
அன்றுதானே கல்லூரி விடுமுறை.

டி.தமிழ் ஜெயப் பிரகாஷ்
முது வேதியல் ( நிறை )

## தேர்தல்



ஐந்தாண்டு வருகை பொய்
ஓராண்டு வருகை மெய்
மக்களின் பிரச்சனை மெய்
நிறைவேற்றும் வாக்குகள் பொய்.

மு.உமாமகேஷ்வரி
இளம் கணிணிப் பயன்பாட்டியல் ( இடை )



*ஆசிரியர்* : டேய் அருண்! கவிஞர்கள் வர்ணிப்பது போல் நம் நாட்டில் பாலும், தேனும் பெருகி ஓடினால் எப்படி இருக்கும் ?

*அருண்* : ஒரே ஈயும், எறும்பும் பிடுங்கி தின்னும் சார்.

ஆர்.துர்காதேவி
இளம் வேதியியல் ( இடை )

## உண்மை

சில சமயம்
சிலைகளும் சிரிக்கும்
சிற்பியைப் பார்த்து
இல்லை...
சீர் கெட்டுப் போன
இந்தச் சமுதாயத்தைப்
பார்த்து...

ஜா.ரகுமான் தாரிஸ்
இளம் வணிகம் ( முதல் )

## சாதிக்க



வாடுவதற்காகப் பூப்பதில்லை பூ
அழிவதற்காக வளர்வதில்லை செடி
பாதிப்பதற்காக வீசுவதில்லை காற்று
சாவதற்காகப் பிறப்பதில்லை
தற்கொலை என்பது மூடத்தனம் - மனிதன்
சாதிக்கப் பிறந்திருக்கிறான்

வ.ஜீவிதன்
இளம் தாவரவியல் ( முதல் )

## எய்ட்ஸ் வருமா ?

தில்லுக்குப் பின் காசி
எய்ட்ஸ் வரும் முன் யோசி
காசிக்குப் பின் ஜெமினி
எய்ட்ஸ் வரும் முன் கவனி
ஜெமினிக்குப் பின் கிங்(கு)
எய்ட்ஸ் வந்தால் உனக்கு சங்கு.

கை.பகலவன்
இளம் தாவரவியல் ( முதல் )




# Mayura

# Quality

# Xerox

- XEROX
- DTP
- STD
- ISD
- LAMINATION
- SPIRAL BINDING
- COLOUR XEROX
- PROJECT WORK

3, Palanisamy Angadi,
No.2 Road,
Opp.: Sundaram Theatre
Mayiladuthurai.
☎ : 224403
Fax : 223367




## சிந்திப்பீர் வெல்வீர்

சிந்தித்து எழுதுங்கள்
சிந்தனையால்
வெல்லுங்கள்

1. அக்டோபர் 1-ந் தேதி பிறந்த இந்தியப் பிரதமமந்திரி யார் ?
2. உலகின் மிகச் சிறிய நாடு எது ?
3. சுயமரியாதை இயக்கத்தை யார், எந்த ஆண்டு தோற்று வித்தார் ?
4. உலகின் மிகப் பெரிய பாராளுமன்றம் ?
5. ஆபரேஷன் கரும்பலகை என்பது எதைக் குறிக்கிறது?
6. பங்களா தேஷின் பழைய பெயர் என்ன ?
7. தேசிய விளையாட்டுத் தினம் என்று அனுசரிக்கப் படுகின்றது ?
8. இந்தியாவின் முதல் நடிகை யார் ?
9. ஈ.சீ.ஜி. சோதனை இந்தியாவில் யாருக்கு முதலில் செய்யப்பட்டது ?
10. இந்தியாவில் இருமுறை துணைக் குடியரசுத் தலைவராக இருந்தவர் யார் ?

திருப்புக ☞

இளந்தூது

**பரிசுக் கூப்பன்**

பெயர் ____________________

____________________

வகுப்பு ____________________

பதிவு எண் ____________________

**விடைகள்**

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________
7. ____________________
8. ____________________
9. ____________________
10. ____________________

### விதிமுறைகள்

❖ இந்தப் பத்துக் கேள்விகளுக்கு விடை எழுதிக் கூப்பனைப் பூர்த்தி செய்து ஆங்கிலத்துறைப் பேராசிரியர் திரு.எஸ்.ஞானஸ்கந்தன் அவர்களிடமோ, இளந்தூது பெட்டியிலோ சேர்க்கவும்.

❖ ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் மூவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கப்படும்.

❖ பத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் இல்லையெனினும் அதிகக் கேள்விகளுக்கு சரியான விடையளிப்பவர்களுக்கு வாய்ப்பு தரப்படும்.

❖ விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 30-11-2003

❖ ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.






**OUR BUSINESS MOTTO IS MORE VALUE TO YOUR MONEY**

- Complete Vision Care Under One Roof.
- Eyes Testing on the Computerised Equipment by an Experienced Optometrist.
- Dr's. Priscription Accurately Dispensed.
- Contact Lenses.
- Latest & Good Quality Frames.
- Sun Glasses
- Free Service for Spcetacles.
- Free Courier Services. and Much More...

*kindly visit Us :*



**National Opticals**

31, Cutcherry Road,
Opp. to Union Club,
Mayiladuthurai.
☎ : 226660

## மனித நேயம் படைப்போம் வா !



எங்கெங்கோ பிரிந்திருக்கும்
மேகங்கள் ஒன்று கூடுவதால்
அங்கே... மழை பொழிகிறது.
எங்கெங்கோ பிரிந்திருக்கும்
ஆறுகள் ஒன்று கூடுவதால்
அங்கே... கடல் சங்கமமாகிறது
எங்கெங்கோ பிறந்திருக்கும்
மலர்கள் ஒன்று கூடுவதால்
அங்கே... பூமாலையாகிறது
எங்கெங்கோ பிறந்திருக்கும்
இருவர் ஒன்று கூடுவதால்
அங்கே... காதல் பிறக்கிறது
ஆனால்...
எங்கிருந்து வந்தது இந்த ஜாதி
ஜாதியை வெறுத்து வா !
மனித நேயம் படைப்போம்

மு. மகேந்திரன்
இளம் வரலாறு ( நிறை

## தடிப்பு ஏன் ?

நம் உடலில் கொசுக்கள் மற்றும் பூச்சிகள் கடித்த அவ்விடத்தில் தடித்து விடுகிறது. இதற்குக் காரணம் என்ன ?

பூச்சிகள் கடிப்பதால் சருமத்தில் ஏற்படும் சிராய்ப்பா சருமத்தில் உள்ள குருதி நாளங்கள், தந்துகிகள் ஆகிய விரிவடைகின்றன. மேலும் ஹிஸ்டமின் போன்ற பொருள்க அவ்விடத்தில் சுரக்கின்றன. இதனால் நீர்த்தேக்கம் ஏற்பட சருமம் தடித்து விடுகிறது.

எம். நூருல் கு
இளம் நுண்ணுயிரியல் ( இ



## ஆசை...

சுதா, மாலினி இருவரும் ஒரே வகுப்புத் தோழிகள் ஹாஸ்டலில் ஒரே அரையில் தங்கி இருப்பவர்கள்.

ஏய் சுதா, சோம்பேறி, எந்திரி மணி 8 ஆகப் போகிறது. ஏய் மாலினி நீ நல்லா இருப்பியா ? என்னோட ட்ரீம்ம கலச்சிட்டியே, அய்யோ எவ்வளவு அழகா இருந்தது தெரியுமா ? பசுமையான புல்வெளி, அழகழகான பிளவர்ஸ், அதுல எனக்கு ரொம்ப புடிச்ச மழை ஊசி மாறி தூறல் எங்க பாத்தாலும் லேசான குளிர்காத்து வீசுது அய்யோ என்னால சொல்ல முடியலடி, அவ்வளவு அழகா இருந்தது. எல்லாத்தையும் கெடுத்திட்டியே பாவி. ஆமான்டி நான் பாவிதான் 8 மணிக்கு எந்திரிச்சு, அரைகுறையா எழுதி அசைன்மெண்ட சம்மிட்பண்ணு, மேடம் உன்னைப் பாவின்னு திட்டுவாங்க.



" சாரல் அடிக்குது தம்திக்கு திக்குச்சம்
மேகம் கருக்குது தம்திக்கு திக்குச்சம் "

பாடியபடி மழையில் நனைந்து வந்த சுதாவிடம் என்னாடி இப்படி தொப்பலையா நனைஞ்சிக்கிட்டு வந்து நிக்கிற, ஏய் மாலினி மாலினி இன்னும் ஒரே ஓர் ஆட்டம் மட்டும் போட்டுட்டு வந்துடுரேன்டி, ஏய் சுதா சொல்றதக் கேளு இதுக்குமேல நெனஞ்சின்னா அவ்வளவுதான்.

சுதாவின் வகுப்புத் தோழி கலை மாலினியிடம், ஏய் மாலினி, சுதா ஏன் ரெண்டுநாளா காலேஜ் வரல, அவளா மழையில ஆட்டம் போட்டா இப்ப பீவர் வந்து ரெண்டு நாளா எந்திரிக்கவே இல்ல, என்று பதில் அளித்த மாலினி வகுப்பு முடிந்து அறைக்குத் திரும்பிய மாலினியிடம் சுதா, இந்த உலகத்துலேயே எது பெரிசுன்னு சொல்லு என்றாள். என்ன உன்னோட மழையா ? என்று பதில் அளித்தாள். இல்ல நம்ம ஆசப்பட்டது நமக்குக் கிடைக்கும் போது அதவிடப் பெருசு எதுவுமே இல்ல என்றாள் சுதா. இப்ப நீ என்ன ஆசப்பட்ட உனக்கு கிடச்சுது என்று வினா எழுப்பிய மாலினியிடம்

ஏ
வி
சி

அதிக தரம் ! மிகுந்த சுவை!! குறைந்த விலை!!!

## நியூ அய்யப்பன் ஹோட்டல்

[ உயர்தர சைவ உணவகம் ]

செம்பனார்கோயில்

வாடிக்கையாளர் மற்றும் தங்களின் நல்லாதரவுடன் இயங்கி வரும் எங்களது நியூ அய்யப்பன் ஹோட்டால் - செம்பை

உயர்தரமான பொருட்களைக் கொண்டு சுத்தமாக செய்யப்படும் உணவு பதார்த்தங்கள் தங்கள் வீட்டு விஷேசங்களுக்கு ஆர்டரின் பேரில் அனைத்து வகையான சைவ உணவு வகைகள், ஸ்விட், காரம், குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம் வகைகள் ஆகியவை குறித்த நேரத்தில், குறைந்த விலையில் டோர் டெலிவரி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிக தரம், குறைந்த விலை, அதிக வாடிக்கையாளர்கள் இதுவே எங்களின் குறிக்கோள்

தங்களின் ஆதரவுடன் எங்களது வளர்ச்சி பாதையில்
மற்றும் ஒரு ஹோட்டல்
A.V.C.C. கேண்டீன்
மன்னம்பந்தல் - 609 305.





அதோபாரு ஜன்னல்ல, மேகம் இருட்டிக்கிட்டு வருது, ரொம்ப காத்து வீசுது, மழை வரப்போகுது அதப் பார்த்து நான் ரசிச்சிக்கிட்டே இருப்பேன் என்றாள் சுதா. கலை மாலினியிடம் அன்று வகுப்பில் ஏய்! மாலினி சுதா ஏன் சோகமா இருக்கா? அத என் எங்கிட்ட கேட்கிற அந்த பைத்தியத்துக்கிட்டயே கேளு, ஏய் என்னாச்சு சொல்லுடி? அதுவா இப்ப வின்டர் சிசன் வந்துட்டுது. மழை அடிக்கடி வருது. இவ ஆசைக்கு அளவே இல்லாமல் போச்சு, எப்ப பாத்தாலும் மழையில நனைய வேண்டியது பீவர் வரவேண்டியது. இந்த மாசத்துலேயே மேடத்துக்கு மூணுவாட்டி பீவர் வந்திடுச்சி, நானும் பார்த்தேன். அவங்க அப்பாவுக்குப் போன் பண்ணிச் சொல்லிட்டேன் அவங்க அப்பா ரேடோஸ்.மேடம் தான் அவங்க அப்பாவுக்கு ரொம்ப பயப்படுவாங்களாச்சே. அவங்க அப்பா, படிக்கறதா இருந்தா ஒழுங்காப்படி; இல்லாட்டி வீட்டுக்கு வந்துடுங்கன்னு சொல்லிட்டாங்க.


இல்ல கலை நம்ம ஒரு பொருள் மேல ஆசப்படுறது தப்பு இல்ல. அந்தப் பொருளால நமக்கு எந்த வித தொல்லையோ, துன்பமோ வராதப்போ. நம்ம ஆசப்பட்ட பொருள் அந்தக் தொல்லையை அனுபவிச்சாத்தான் கெடைக்கும்ன்னா, அப்படி ஆசப்பட்ட பொருள் நமக்கு தேவையா?. நாம ஆசப்படறது தப்பில்லை. அதனால நமக்கோ மத்தவங்களுக்கோ தொல்லை வராதவரைக்கும்...

க.தேன்மொழி சங்கீதா
முது நுண்ணுயிரியல் [ நிறை ]

## புகை

வெண்மையான
மனத்திற்குள் வெள்ளை
புகை அடிக்காதே
மனம் வெந்த பிறகு
வாழ் நாளை – விரல்
விட்டு எண்ணாதே...

தா.அமிராபானு
இளம் வணிகம் [ இடை ]



# எங்கள் கல்லூரி

செய்முறைத் தாள் உள்ள தமிழுண்டு
அன்னியரின் ஆசி உண்டு – ஆங்கிலம்
ராமானுஜரின் ரகசியம் உண்டு – கணிதம்
அமிர்த்தியாசென்னின் அறிவுரை உண்டு – பொருளியல்
பில்கேட்சின் பிம்பம் உண்டு – கணிப்பொறியியல்
வரலாற்றின் வடிவம் உண்டு – வரலாறு
கலாமின் கனவு உண்டு – இயல்பியல் / மின்னணுவியல்
கியூரியின் கிறுக்கல் உண்டு – வேதியியல்
ராபட்டியோவானின் ராகம் உண்டு – வணிகம்
டார்வினின் டான்ஸ் உண்டு – உயிரியல்
திரைப்படத்தின் கற்பனையும் உண்டு – காட்சித் தகவியல்
இன்னும் என்னென்னவோ உண்டு
மொத்தத்தில் இங்கு உயிர் உண்டு
உணர்வு உண்டு, வயிறார உண்ண
நீயும் வந்துப்பார் உனக்கும் நல் வாழ்வு உண்டு.

கணே.விஜயன்
இளம் கணினி ( நிறை )



மகன் : அப்பா, பரீட்சைக்குப் போகிறேன் விடை கொடுங்கள் !

அப்பா : ( கோபமாக ) விடையெல்லாம் தரமுடியாது. ஆசிரியரிடம் மாட்டிக்கொள்ளவா விடைகேட்கிறாய் ?

ஆர்.துர்காதேவி
இளம் வேதியல் ( இடை )






## டைட்டானிக் – நிழலும் , நிஜமும்

| | | |
|---|---|---|
| ஆண்டு | 1898 | 1912 |
| உருவாக்கியவர் | மார்கன் ராபர்ட்சன் | ஓயிட் ஸ்டார் லைன் ( கப்பல் கம்பெனி ) |
| பெயர் | டைட்டான் | டைட்டானிக் |
| எடை | 66,000 டன் | 70,000 டன் |
| நீளம் | 800 அடி | 882 அடி |
| கொள்ளளவு | 3,000 பயணிகள் | 3,000 பேர் |
| இல்லாதது | லைட்போட் | லைட்போட் |
| விபத்து | பனிப்பாறை இடித்து | பனிப்பாறை மோதி |
| மாதம் | ஏப்ரல் மாதம் | ஏப்ரல் மாதம் |

மேற்சொன்னவையில்
இடதுபுற அட்டவணை 1898-இல் எழுதப்பட்ட நாவல் – நிழல்
வலதுபுற அட்டவணை 1912-இல் உருவாக்கிய கப்பல் – நிஜம்
முடிவு இரண்டுக்குமே ஒன்று.

கே.ஜெயகிருத்திகா
இளம் நுண்ணுயிரியல் ( இடை )

### கருவறைக்குள் கல்லறை



கருவுக்கு
உருவாகிய கருவுக்கு
உருவாக இருக்காமல்
எருவாக நினைத்துத்
துருவாக விடுகிறார்கள்

அ.அனிதா
இளம் வேதியல் ( நிறை )

### கண்ணீர்

கண் எனும்
சிப்பிக்குள்
ஒளிந்திருக்கும்
முத்துக்கள்

துர்க்கா தேவி
இளம் இயல்பியல் ( நிறை )

# அருள் புக்ஸ் & ஐஸ்கிரீம் பார்லர்

கல்லூரி மாணவர்கட்குத் தேவையான அனைத்து வகை நோட்டுகள், பேனாக்கள் மற்றும் ஸ்டேஷனரி வகைகளும் குறைந்த விலையில் தரமானதாகக் கிடைக்கும்

எந்நாளும் சுவையான அமுல் ஐஸ்கிரீம் வகைகள் கிடைக்கும்.

வருகை தர வேண்டுகிறோம்.



## அருள் புக்ஸ்

ஏ.வி.சி.கல்லூரி [ எதிரில் ]
SMH பில்டிங், மன்னம்பந்தல்.

# ராஜா தையல் பள்ளி

[ மகளிர் மட்டும் ]



162, ரஸ்தா மணவெளித் தெரு,
குருஞான சம்பந்தர் மெயின் ஸ்கூல் பக்கத்து தெரு,
மயிலாடுதுறை – 609 001.
☎ : 226839

எங்களிடம் நவநாகரீக முறையில் சுடிதார்கள், ஜாக்கெட்டுகள் தைத்துத் தரப்படும்.
சுடிதார் மெட்டீரியல்ஸ் கிடைக்கும்.






# மீனவன்


யாதும் ஊரே யாவரும் கேளிர்!
என்ற சொல்லைக் கேட்டு
வேகமாய்ச் சென்றேன்
தெற்கை நோக்கி
என்னையும் அறியாமல்
இராஜ மரியாதையில் வரவேற்று
இராஜியத்தைக் கேட்டுணர்ந்து
சில்லரைகளையும் பிடுங்கிக் கொண்டு
சிங்கல சிறையில் சீண்டதகா அறையினில்
என்னையும் அடித்து அடைத்து வைத்தனர்
தமிழ்த் தீவிரவாதி என்று...
ஓலக் குரலில் என் உண்மையைச் சொன்னேன்
நான் பருவக் காற்றில் திசை தெரியாத பறவையானதைக்
கருணை கூட இல்லாமல் காலால் உதைத்தனர்
யாரிடம் கதை விடுகிறாய் என்று
என் கண்ணீரே கடல் நீரானது
அந்த வெண்ணீரில் கொதித்தது
என் மனம் மட்டும் அல்ல.
என் வருகைக்காக கடலையே பார்த்து பார்த்து
காத்து நிற்கும் என் முதிர்ந்த தாயின்
தளர்ந்த இதயமும் தான்...

சி.கே.நித்யா
இளம் இயல்பியல் [ இடை ]

# வரதட்சணை

பெண்ணே!
வாழ்க்கை என்னும் தோட்டத்தில்
அரும்பாய் மலர்ந்தாய்
பள்ளி என்னும் பருவத்தில் மகரந்தமாய்
சிறு தளிர் விட்டாய்
திருமணம் என்னும் பந்தத்தால்
மலராய் மலர்ந்தாய்
இப்போது வரதட்சணை என்னும்
பெயரில் காய்ந்த மலர்போல் வீசி!
எறியப்பட்டாயே ஓ! இது தான்
நவீன உலகமோ!

ஆர்.பூங்குழலி
இளம் வேதியியல் [ முதல் ]



# மானுடம்

மனிதன் என்ற விதை ஊன்றி
சாதி என்ற களை எடுத்து
மதம் என்ற புழுவைக் கொன்று
தாய்நாட்டுப்பற்று என்ற உரம் இட்டு
இந்தியன் என்ற மரத்தை வளர்த்தால்
அன்பு என்ற மழை பொழிந்து
மகிழ்ச்சி என்ற தென்றல் வீசும்

கே.சுகந்தவல்லி
இளம் வேதியல் [ இடை ]





# நம் கையில்

கி.ராஜேஸ்வரி
இளம் இயல்பியல் [ நிறை ]

ரம்மியமாய், மனத்துக்கு இதமான, சங்கீதத்தோடு சங்கதியையும்
த்து சுவைக்கும் படியாய் அமைந்திருந்தது அன்றைய திரைப்படங்கள்!
ிதர்கள் மனிதத் தன்மையோடு பொழுதுபோக்குக்காக வைத்திருந்த
திரைப்படங்கள் இன்று விலங்குகளுக்கான அஃறிணைத் தன்மையோடு
ருவதாய்த் தோன்றுகிறது ! எப்படி திருடினால் மாட்டிக்கொள்ளாமல்
ுப்பது ? எப்படி கொலை செய்வது ? ... வன்முறையைத் தூண்டுவது
படி... ? இவையெல்லாவற்றையும் நீக்குகிறோம் என்ற பெயரில்
றாகப் பிரகடனப்படுத்துவது தான் பலரின் நோக்கமாக இருக்கிறது!

பொதுவாக எதிர்மறைகள், கண்ணையும் கருத்தையும் உறுத்துபவை
ற்றை நோக்கி ஈர்க்கப்படுவது மனித இயல்பு ! இதை நன்றாகப் புரிந்து
ாண்டு விட்டனர் திரைப்படத் துறையினர் !

தங்கள் சுயநலத்துக்காக ஒரு சமுதாயத்தையே சீரழிக்கிற இவர்கள்,
க வேர்களாகிய இளைஞர்களையும் தவறான பாதைக்கு இட்டுச்
ல்கின்றனர் ! ஆனால் விலை கொடுத்து நாமே சீரழிவைத் தேடுவது
தனைக்குரிய செய்தி தான் ! மற்றவர்களை விட மாணவர்கள் ... ?

கேட்டால் பொழுதுபோக்கு என்பார்கள் ! பொழுது போக்க வேறு
றுமா இல்லை ? எவ்வளவோ நல்ல செய்திகளைத் தம்முள்
தத்துக்கொண்டிருக்கின்ற ஏராளமான புத்தகங்களைப் படித்துப்
ழுதுபோக்கவே ஒரு யுகம் வேண்டும் !

வெறும் மூன்று மணிநேரம் ! அதில் ஆபாசத்தையும்
முறையையும் தருகின்ற மசாலாப் படங்கள் தான் இன்று மக்களால்
ருமளவு ரசிக்கப்படுவதாய் இருக்கிறது ! அதிலும் சமீபத்தில்
ளியாகிய பல படங்கள் நல்ல செய்திகள் என்ற போர்வையில் நம்மால்
பனையில் கூட கண்டிராத வக்கிரங்கள் மட்டுமே நிரம்பியுள்ளன !
ல்களைக் கேட்கவே வேண்டாம்... இது இன்றைய இளைஞர்களுக்குத்
வைதானா ?

வானம் தொட்டு விடும் தூரம் தான் என்று மார்தட்டுகிற
ளைஞர்கள், மனிதம் தழைக்கப் பாடுபடுவோம் என்று சவால் விடுகிற
ளைஞர்கள் இவற்றைச் செயலில் காண்பிக்காதது ஏனோ? இளைஞர்கள்
ாவது சாதிக்க வேண்டும் என்று எண்ணினால், இது போன்ற
ரப்படங்களை அறவே புறக்கணிக்கட்டும்.. மனிதம் தானாய் மலர்ந்து
ும் !

எனவே, எதுவுமே இளைஞர்கள் கையில் தான் இருக்கிறது!
குவதா.. அழிப்பதா என்பது இனி அவர்கள் கையில் !

☎: (04364) 226975

SUN WIN THE WORLD

# SSC
## SUN SOFTWARE COLLEGE

JOIN SSC

GET PROFESSIONAL CARRIER

| | |
|---|---|
| C, C++, Java, Unix | Prog.2000: E \ Acad 2000 |
| VB, VC++, ASP, Oracle | ASP.NET, VB.NET |
| All MultiMedia Course | TALLY 6.3 |
| Digital Graphics | Accounting Package |
| Laser Printing | Hardware & Networking Courses |

Special Features

* Parking Facility
* specialized Project Team
* Extensive Guidence
* Well Equipped Lab
* CADD Centre only at SSC

UG, PG, PROJECT

TAMILNADU COMPUTER EDUCATION DEVELOPMENT SCHEME

IN PGDCA, PGD-E.COM, DCA, DIT Certificate

ALL KIND OF SOFTWARE, HARDWARE COURSES & DTP WORKS

Razak Tower, #15, Cutchery Road,
Mayiladuthurai - 1. E-mail: SSC_Myld@Sify.com





2005-இல் பொன்விழாக் காண உள்ள
ஏ.வி.சி.கல்லூரி
கல்வி வானில் தாரகையாய் ஒளிரட்டும்
என்னும் வாழ்த்துடன்...



உணவு விடுதியை ஒரு தவமாகவே எண்ணித் தொழிலில்
நேர்மையையும் உண்மையையும் விருந்தோம்பலில்
கனிவையும் கலந்து, தங்கள் ஒவ்வொருவரையும் எங்களின் சிறப்பு
விருந்தினராக ஏற்று உபசரிப்பதே எங்களின்
குறிக்கோள் ஆகும்.

என்றும் அன்புடன்...

**பெரி.இராசேந்திரன்,**
கற்பகம் செட்டிநாடு உணவகம்,
60-61 மகாதானத் தெரு,
மயிலாடுதுறை - 609 001.
தொலைப்பேசி : 224654




உங்கள் படைப்புகள், விமர்சனங்கள்
இளந்தூது மின்அஞ்சல்
ilanthoodhu@rediffmail.com
மூலமும் அனுப்பலாம்

இளந்தூது
அந்தத் பாபம் ஆக்கம் செய்குவோம்

படைப்புகளைத் திருத்தவோ, சுருக்கவோ ஆசிரியர்குழுவிற்கு உரிமை உண்டு.

ஒருங்கிணைப்பாளர் : முனைவர் **துரை. குணசேகரன்** ( தமிழ்ப் பேராசிரியர் )

## ஆசிரியர் குழு

*ஆசிரியர் :*
**தே.கணேஷ் பிரபு** , இளம் வணிகம் ( நிறை )

*இணையாசிரியர் :*
**இரா. பிரியதர்ஷினி**, இளம் மின்னணுவியல் ( நிறை )

*துணை யாசிரியர்கள் :*
**செள.சிவச்சந்திரன்**, இளம் பொருளியல் ( நிறை )
**க.இராஜலெட்சுமி**, இளம் மின்னணுவியல் ( நிறை )
**ச.மீனா**, இளம் வேதியல் ( நிறை )

*சிறப்பு ஆலோசகர் :*
**பா.இன்பநிலா**, முது வேதியல் ( நிறை )

*உறுப்பினர்கள் :*
**க.அழகிரி**, இளம் வேதியல் ( இடை )
**ந. இராஜா**, இளம் பொருளியல் ( இடை )
**க.தெட்சிணாமூர்த்தி**, இளம் பொருளியல் ( இடை )
**ச.குணா** இளம் மின்னணுவியல் ( இடை )
**க.குழலினி**, இளம் நுண்ணுயிரியல் ( இடை )
**ச.பி.நடராஜ்**, இளம் பொருளியல் ( முதல் )
**ச. அருணாசலம்**, இளம் வணிகம் ( முதல் )
**ஜா.ரகுமான் தாரிஸ்**, இளம் வணிகம் ( முதல் )

**இளந்தூது**
அ.வ.அ.கல்லூரி ( தன்னாட்சி )
மாணவர் இதழ்
( தனிச்சுற்றுக்கு மட்டுமே )
மன்னம்பந்தல் - 609 305. மயிலாடுதுறை.

*ஒளியச்சுகோர்வை & அச்சிட்டோர் :*
**அன்னை பிரிண்டர்ஸ்,** புஷ்பா காம்ப்ளக்ஸ், விஜயா தியேட்டர் ரோடு, மயிலாடுதுறை. ☎ : 228001


ஆடைகளால் ஆனந்தம்
சீமாட்டி
மயிலாடுதுறை
தீபாவளி
கொண்டாட்டம்...